

தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவுக்கு ஆதரவாக தாராபுரம் மேற்கு ஒன்றியம், அலங்கியத்தில் மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் (விருதுநகர் தெற்கு), தங்கம் தென்னரசு (விருதுநகர் வடக்கு) ஆகியோர் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலையில் மனித நேய ஜனநாயக கட்சி தலைவர், சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தமிமுன் அன்சாரி பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளர் சாதிக் பாட்ஷா உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கழக நிர்வாகிகள் தலைமையில் இயங்கி வந்த கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி நிறுவனத்தை

சட்டத்திற்குப் புறம்பாக கைப்பற்றத் துடிக்கும் த.வெ.க.!

கழக நிர்வாகிகள் மீது பொய் வழக்குப் பதிவு!

தஞ்சாவூர் அக்.2. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி நிறுவனத்தை எந்தவித தகுதியும் இல்லாமல் கழக நிர்வாகிகள் மீது அவதூறு வழக்கு பதிந்துகாவல்துறை மூலம் முடக்கி கைப்பற்ற துடிக்கிறது த.வெக. அரசு.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி 123 ஆண்டுகால மாக 156 கிளைகளுடன் தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக இயங்கி வருகிறது. இதன் தலைவராக கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, துணைத் தலைவராக முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மேலாண் இயக்குநராக பி.ஆர்.பி.வேலப்பன், இயக்குனர்களாக தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் க.அன்பழகன், மற்றும் கழக நிர்வாகிகள்பி..பிரகாசம், ஜி.துரைராஜ், இ.அம்பிகா, எம்.குருபிரசாத், கூடுதல் இயக்குனராக எஸ். இரவிச்சந்திரன் ஆகியோர் கொண்ட குழுவினர் நிறுவனத்தை இயக்கி வருகின்றனர்.

இந்நிலையில் ஒன்றிய நிதி அமைச்சகத்தின் சட்டத்திட்ட விதிகளுக்கு உட்பட்டு நிதி நிறுவனத்தில் இயக்குனர்களுக்கான தேர்தல் செப்டம்பர் 27,28 &29 ஆகிய மூன்று தேதிகளில் நிறுவனத்தின் பங்குதாரர்களை கொண்டு NSDL என்ற ஒன்றிய அரசின் அங்கீகாரம் பெற்ற இணையதளம் வழியாக தேர்தல் நடைபெற்றது. இதில் முறையாக நடைபெற்ற இத்தேர்தலில் கழக நிர்வாகிகள் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றனர்.

இதனை பொறுத்துக் கொள்ள முடியாத த.வெ.க சேர்ந்த வேளாண் மைத்துறை அமைச்சர் வினோத் ரவிதுரண்டுதலின் பேரில் நிதி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை த.வெ.க மாநகரச் செயலாளர் முருகானந்தம், காங்கிரஸ் மாவட்டத் தலைவர் குமரன் உள்ளிட்டோர் 100க்கும் அதிகமான நபர்களுடன் நிறுவனத்தின் உள்ளே புகுந்து இது எங்கள் ஆட்சி, வேளாண் மைத்துறை அமைச்சரை மீறி நிறுவனத்தை நடத்திடு வீர்களா என்றும் கழக நிர்வாகிகளை ஆபாசவார்த்தைகளால் பேசியும் கலவரத்தில் ஈடுபட்டனர். இதில் நிதிநிறுனத்தின் கண்ணாடி மற்றும் முகப்பு கதவுகள் உடைக்கப்பட்டது. இதுகுறித்து ஏற்கனவே காவல்துறைக்கு தகவல் தெரிவித்து உரிய பாதுகாப்பு கோரியிருந்த போதிலும் காவல்துறையினர் எந்தவித முன்நடவடிக்கையும் எடுக்காமல், நிதி நிறுவனத்தின் உள்ளே 100 க்கும் மேற்பட்டோரை அனுமதித்து த.வெ.கவினருக்கு ஆதரவாக செயல்பட்டனர். நிறுவனத்தை சூறையாட முயன்றபோது அதனை தடுத்த நிறுவனத்தின் துணை பொது மேலாளர்களை எந்தவித விசாரணையும் இன்றி சட்டத்திற்கு புறம்பாக கைது செய்து அழைத்து சென்றுள்ளனர்.

அதே நேரத்தில் சென்னையில் உள்ள மண்டல அலுவலகத்தில் இருந்த மேலான் இயக்குனர் பி.ஆர்.பி.வேலப்பனையும் உரிய காரணமின்றி கைது செய்து மாம்பழம் R1 காவல் நிலையத்தில் அடைத்து வைத்தனர்.

அதனை தொடர்ந்து த.வெ.க, காங்கிரஸ், அ.தி.மு.க கட்சியை சேர்ந்தவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் நிதி நிறுவன அதிகாரிகளிடம் உங்கள் நிர்வாக குழுவை உடனே ராஜினாமா செய்ய சொல்லுங்கள் இல்லாவிட்டால் உங்கள் அனைவர் மீதும் பொய் வழக்கு பதிந்து அசிங்கபடுத்தி வெளியே அனுப்புவோம் என்று மிரட்டியுள்ளனர்.

அதனை அறிந்த கழக நிர்வாகிகள் ஜனநாயகமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் நாங்கள் ஏன் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கேள்வி எழுப்பினர்.

இதற்கிடையே அமைச்சர் வினோத் காவல்துறையிடம் நிதி நிறுவன இயக்குனர்கள் மீது பொய் வழக்கு பதிய அழுத்தம் கொடுத்ததையடுத்து த.வெ.க மகளிர் அணியினரை வைத்தும், நிதி நிறுவனத்தில் முறைகேடு செய்ததால் பணியிடை நீக்கம் செய்யப்பட்டவர்களையும் கொண்டு பெண்கள் வன்கொடுமை சட்டத்தின் கீழ் பொய் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மேலும் அங்கு பணி பயிற்சிக்கு வந்தபயிற்சி ஊழியர்களை காலை 11.30 மணிக்கு காவல்துறையினர் சிறைபிடித்து இரவு 10.30 மணி விடுவித்தனர். வெளியே வந்த பயிற்சி ஊழியர்களிடம் விசாரித்த போது நிதி நிறுவனத்தில் வேலைக்கு சேர பணம் கேட்டனர் என்றும் எங்களை பயன்படுத்திதான் இணையத்தளத்தில் வாக்கு பதிவு செய்தனர் என்று கட்டாயபடுத்தி மிரட்டி எழுதிவாங்கினார்கள் என்று தெரிவித்தனர். எழுதி தராதவர்களை மேலும் 1 மணி நேரம் அடைத்து வைத்து அவர்களிடமும் எழுதி வாங்கியுள்ளனர்.

எந்தவித தகுதியும் இல்லாமல் ரீல்ஸ் மூலம் மட்டுமே கவர்ச்சி காட்டி ஆட்சிக்கு வந்த த.வெ.க தற்போது ஜனநாயக முறைப்படி கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி நிறுவனத்தில் வெற்றி பெற முடியாததால் குறுக்கு வழியில் த.வெ.க குண்டர்களை வைத்தும், காவல்துறையினரை வைத்தும் மிரட்டி கொல்லைபுறம் வழியாக நிதி நிறுவனத்தை பிடிக்க முயற்சி செய்கிறார்கள்.

நிதி நிறுவனத்தில் வைப்பு தொகை வைத்துள்ள வாடிக்கையாளர்கள் த.வெ.கவினர் நிதி நிறுவனத்தை கைப்பற்றினால் எங்கள் வைப்பு தொகைகள் என்னாவது என்ற அச்சத்தில் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மதுரை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் க.தண்டபாணி, வெள்ளக்கோயில் நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் முன்னிலையில் பொது மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் மதுரை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், மூலனூர் பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் – மதுராந்தகம் தொகுதியில்

இ.பரந்தாமனை ஆதரித்து கிராமப் பெண்கள் சபைக் கூட்டம்!

மேயர் பிரியா ராஜன் – இளம் பேச்சாளர்கள் பங்கேற்பு!

மதுராந்தகம்,அக்-2-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கோரி கிராமப் பெண்கள் சபைக் கூட்டங்கள் வையாவூர், மலை வையாவூர், சூரை உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றன.



இக்கூட்டங்களில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், இளம் பேச்சாளர்கள் ஜோதி, ரோஜா, ஷர்மிளா, வனிதா, கீர்த்தனா உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொது மக்களிடம் வாக்கு சேகரித்தனர்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசுகையில், "வருகிற 6ஆம் தேதி நடைபெறும் தேர்தல் வெறும் தேர்தல் அல்ல; வெறுப்பிற்கும் பண்பிற்கும், அதிகாரத்திற்கும் அன்பிற்கும் இடையே நடைபெறும் தேர்தல்" என்றார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதால் மீண்டும் இடைத்தேர்தல் ஏற்படும் நிலை உருவாகக்கூடாது என்று குறிப்பிட்ட அவர், 78 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுடன் பயணித்து, கொள்கையில் உறுதியாக நிற்கும் இயக்கம் தி.மு.க. என்று கூறி, வேட்பாளர் இ. பரந்தாமனுக்கு ஆதரவு கோரினார்.

மேயர் பிரியா ராஜன் பேசுகையில், முந்தைய சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் வேறு கட்சிக்குச் சென்றதாலேயே இந்த இடைத்தேர்தல் ஏற்பட்டதாகக் குற்றம்சாட்டினார். தொகுதியில் பேருந்து நிறுத்தம், நியாய விலைக் கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்னும் தேவைப்படுவதாக மக்கள் தெரிவிப்பதாகவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி இத்தகைய தேவைகளை நிறைவேற்றி யிருக்கலாம் என்றும் கூறினார். பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதும் அரசின் முக்கியக் கடமை என்று வலியுறுத்தினார்.

இளம் பேச்சாளர் ரோஜா, விலைவாசி உயர்வை பாடல் மூலம் விமர்சித்ததுடன், ஒரு கட்சியின் சார்பில் வெற்றி பெற்று பின்னர் வேறு கட்சிக்குச் சென்று மீண்டும் வாக்குக் கேட்பது குறித்து வாக்காளர்கள் சிந்திக்க வேண்டும் என்றார். குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இளம் பேச்சாளர் ஜோதி, மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பெண்களுக்கான திட்டங்களை எடுத்துரைத்தார். சாலை, குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், ஒரு குடும்பத்திற்கு வரனைத் தேர்வு செய்யும் போது எப்படி விசாரித்து முடிவு செய்கிறோமோ, அதேபோல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துபவரின் தகுதி மற்றும் செயல்பாடுகளையும் ஆராய்ந்து வாக்களிக்க வேண்டும் என்றார்.

இளம் பேச்சாளர் ஷர்மிளா பேசுகையில், பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக திராவிட இயக்கம் தொடர்ந்து குரல் கொடுத்துள்ளதாகக் கூறினார். சாலை, குடிநீர், பேருந்து உள்ளிட்ட தொகுதியின் அடிப்படைத் தேவைகளைச் சட்டமன்றத்தில் எடுத்துரைத்து, அவற்றைப் பெற்றுத்தரும் பிரதிநிதி தேவை என்றும் வலியுறுத்தினார்.

இறுதியாக, அக்டோபர் 6ஆம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலில் வாக்காளர்கள் கடந்தகாலப் பணிகள், நிறைவேற்றப்படாத தேவைகள் மற்றும் வேட்பாளர்களின் செயல்பாடுகளை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இ. பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு அளிக்குமாறும் பிரச்சாரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ப. தாயகம் கவி, கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, ஒன்றியச் செயலாளர் சத்தியசாய் நாதன், பகுதி செயலாளர்கள் செ. தமிழ்வேந்தன், எம் சாமிகண்ணு, பெரம்பூர் ஆர். ராஜன், எம்.டி.ஆர். நாகராஜ், எஸ். ராஜசேகர், நா. ரஞ்சித் விஜயாலயன், இரா. வீரமணி, 34, 35, 36ஆம் பாகப் பொறுப்பாளர்கள் சி. சுந்தரவரதன், பிரதாப், மதன் பால், நாகராஜன், நாகப்பன், தியாகராஜன், நாராயணன், பாலாஜி, தேனி, வினோத், தனிகாசலம், ரமேஷ், வேம்புலி, மணி கண்டன், சுரேஷ், பத்தன் அருள்ராஜ், டி.ஜி.எம். பெருமாள், பி. தாண்டவராயன், பி. பார்த்திபன், சத்தியராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் - கோ.சி.வள்ளுவன் தலைமை - மதுராந்தகம் தொகுதியில்

மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பு!

சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் அறிக்கை!

மதுராந்தகம், அக். 2-

மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த. சரவணகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

06.10.2026 அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன், மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில்



போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றியம், கடமலைபுத்தூர் ஊராட்சி பகுதியில் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் தலைமையில் வாக்கு சேகரிக்கும் பணி இன்று (02.10.2026 வெள்ளிக்கிழமை) காலை 07.00 மணியளவில் நடைபெற வுள்ளது.

இதில் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் தலைமை சங்க நிர்வாகிகள், பணிமனை செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் மற்றும் செயல் வீரர்கள் பெருந்திரளாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுமாறு தலைமைச் சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தலைமைக் கழக இலக்கிய அணி சார்பில் கவிச்சுடர் கவிதைப் பித்தன் தலைமையில் நாகை சந்திரபாபு ஏற்பாட்டில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவை ஆதரித்து தளவாய்பட்டி கிராமத்தில் கரூர் முரளி. வரசுர் காமராஜ். ஆவடி பாஸ்கர். பசும்பொன் ரவிச்சந்திரன். மற்றும் அப்பகுதி கழக நிர்வாகிகள் பெருந்திரளோடு சுற்று வட்டாரத்தில் உள்ள கிராம மக்களை திண்ணைப் பிரச்சாரம் மூலம் சந்தித்து வாக்குகளை சேகரித்தனர்.





கோவை வடக்கு மாவட்டம், இடையர்பாளையம் பகுதி, 35 வது வட்டக் கழகத்தில் அறிஞர் அண்ணா நகரில் வீட்டு உரிமையாளர் நல சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளர். மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் TSLR பட்டா வேண்டி விண்ணப்பித்த அனைவருக்கும் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் வீட்டு உரிமையாளர்கள் நல சங்கத்தின் தலைவரும் 35 வது வட்ட கழக அவை தலைவருமான சோ.துரை பாண்டியன், பகுதி துணைச் செயலாளர் திருமதி கண்ணகி , 35வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத், BLA 2 சங்கர பாண்டியன், அக்வா வாட்டர் சொலுவஷன் உரிமையாளர் பி.எல்.ஏ.2 சோனைச்சாமி, BLA 2 வீரப்பன், ஜெகதீசன், மற்றும் சுப்பிரமணியன், தர்மராஜ், நஞ்சப்பன்,திருமதி ரேவதி, நளாயினி, வெண்மதி, நிர்மலா மேத்யூஸ், ஆறுமுகம் , டாக்டர் கணேசன், மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.